சிவமயம்

# ஆருணிகோபநிஷத்தம்

—(*)—

இஃது

சாமவேதத்தின் ஓர்சாகையின் இறுதியிலுள்ளது

மூலபாடம், பொழிப்புரை

விசேஷ வுரையுடன்

சிதம்பரம் பிரம்மவித்தியா பத்ராதிபரான

பரசமய பஞ்சானன பண்டித பாஞ்சஜன்ய

பிரம்மஸ்ரீ

## சு. ஸ்ரீநிவாசதீக்ஷிதரவர்களால்

—(*)—

வடமொழியிலியற்றப்பட்ட

ஆருணிகோபநிடத டீகா

என்னும் வியாக்கியானத்துக்கிணங்க

அவர்களாலேயே மொழிபெயர்க்கப்பட்டு

தமது

நடுக்காவேரி ஜகத்குருயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

1899 ௵

[illegible]

— [illegible] —

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

# ஸ்ரீவணீகோபதிஷ்டவசநஸங்க்ரஹணிகா |

—(*)—

| விஷயா: | ப்ருஷ்டம் | பங்க்தி |
|---|---|---|
| அந்தரங்கபூஜைக்ரமம் | ௮ | ௧௭ |
| அயம் க்ருஷ்ணமேவம் பரிஷ்காரகாரம் | ௧௨ | ௨௨ |
| ஸ்ரீவணீ ப்ரார்த்தனம் | ௩ | ௯ |
| ஓம் ஹரி ஓம் ஹரி | ௧௫ | ௧௦ |
| ஔஷதப்ரயோகம் | ௧௧ | ௧௮ |
| கல்பிதகோப்யஹார்ஷ்டி | ௭ | ௨[illegible] |
| பத்மஹம்ஸ்பஹஸ்தம் | ௯ | ௨௬ |
| தத்வோபதேசம் கேவலம் | ௫ | ௨௯ |
| ப்ரஹ்மார்தவாதப்ரயோகம் | ௯ | ௨௭ |
| ப்ரஹ்மபூஜாஸம்பாதம் | ௧௨ | ௫ |
| யதயோஸிக்ஷாயோகம் | ௧௬ | ௨௬ |
| யவனவம்சதிதிசோத: | ௧௯ | ௩ |
| வஷட்காரப்ரயோகம் | ௧௩ | ௨[illegible] |
| ஸமஹாவாக்யஜாபம் | ௬ | ௩ |
| ஸந்த்யாவந்தனம் | ௰ | ௧௮ |
| ஸபரமேஸ்வரய | ௧௧ | ௬ |
| ஸப்தவம்சயோகஸாரம் | ௧௬ | ௯ |

# ஆருணிகோபநிடத விஷயானுக்கிரமணி



ஆருணிகோபநிடதவிஷயானுக்கிரமணி

முற்றிற்று.

# ஆருணிகோபநிடத

## பிழை திருத்தம்

---

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| க | கஉ | வாவ்ரூரெஷௌ | வாவ்ருஷௌ |
| ,, | கரு | ஸ்ரீ ஸம்யூரம் | ஸ்ரீ ஸம்யூம் |
| ,, | உக | ஸ்ரீ ரூக்ஷா ஹயம் | ஸ்ரீ ரூக்ஷாஸ்ஹயம் |
| உ | க௩ | ஆரெவொவாவரெசஃ | |
| ,, | ,, | ஆரெவொவா | ஆரொவை |
| ௩ | க௭ | மென்றும் | மென்னும் |
| ௪ | க௯ | யடைந்து | யடைவது |
| ௫ | உ௬ | விஸ்ரஜெஜஃ | விஸ்ருஜெஜஃ |
| ,, | ,, | விஸ்ரஜெஜஃ | விஸ்ருஜெஜஃ |
| ௬ | கக | வேண்டுமென | வேண்டும் |
| ௭ | உ | உதராக்னியால் | உதராக்னியில் |
| ௮ | க௩ | சஞ்சாரம் | சங்காரம் |
| க௩ | கக | ஊஸன் | ஊன் |
| க௪ | ௮ | பதாநீ | ஸதாநி |
| க௬ | உ௩ | ஈராவ | காரர்ய |
| க௭ | க௩ | ஆருண | அருண |
| உஉ | க௭ | ஓிடிஃஸோது | ஓிடிஃக்ஷ்வஸோது |

ஆருணிகோபநிடத பிழைதிருத்தம்

முற்றிற்று.

---

# ஆருணிகோபநிடதம்

## முகவுரை.

இவ்வுபநிடதம் சாமவேதத்தைச்சேர்ந்த ஆருணிசாகையிலொன்று. சாந்தோக்கியமென்ற சாமவேதவுபநிடதத்தில் இவ்வாருணிமாமுனியின் பெருமை ஆறுவதத்தியாயத்தில் நிரூபிக்கப்பட்டுளது. இவர் அருணர் என்ற மஹாரிஷியின் புத்திரராதலால் இவரை ஆருணியென்றனர். இவர் பெயர் சுவேதகேது. இவ்வாருணி முதலில் தன்பிதாவிடத்து மஹாவாக்கியத்தைஒன்பதுமுறையுபதேசப்பெற்றவரென்றும்நீண்டகாலமில்லறத்திலிருந்து ஈசனை யாராதித்து அதனால் அற்புதமாய் பிரமலோகபதவியைப் பெற்று ஆங்கு பிரம்மதேவனுடன் வேதாந்த விசாரம்செய்து துறவு பேட்டினலவர் முகமாய் சன்னியாசவிதியைக்கேட்டுச்சிந்தித்துத்தெளிந்து திருவருட்கூடினர். இவர் தவாதம் இவ்வுபநிடதத்திலமைந்தமையால் இதனை யாருணிகோபநிடதமென்பது. இதனையே ஆருண்யுபநிடதமென்பாரும் ஆருணேயோபநிடதம் என்பாரும் சிலருளர். இஃது ஆச்சிரமங்களுக்குட் சிறந்த பரமஹம்ஸாச்சிரமத்தையேற்றற்குரிய விதிகளையும் அவ்வாச்சிரமிகளின் தர்மங்களையும், மாணி, இல்லறத்தவன், மாவனத்தான், ஆகிய மூவாச்சிரமிகட்கும் துறவு நிறைவுபெற்றவக்கணத்தே சன்னியாசம் பெறவேண்டும் முறையையும், நிரூபித்ததொன்றும். வேதாந்த வித்தைகளின் கேட்டல் இடையூறின்றி நிறைவேறவேண்டி "ஸ்ரவணாய ஸந்ந்யாஸம் துறந்து கேட்டலை யேற்பானன்றே" யென்று ஆன்றோர் விதித்தமுறைப்படி இதில் சன்னியாசம் விதிக்கப்பட்டது. இதனில் சாதுர்மாஸ்ய சங்கற்பம் முதலிய சன்னியாச விலக்கணங்கள் ஒருவாறு குறிக்கப்பட்டன. இவ்வுப

நிடதத்திற்கும் யாம் வடமொழியிலியற்றிய வியாக்கியானத்துக்கிணங்க தென்மொழியிலோர் உரையையும், நம் நாட்டு வேதாந்திகள் கண்டுகளிக்குமாறு, இயற்றிமுடித்தனம். சென்றவுபநிடதங்களைந்தின் கோசசாமக்ரிகளைப்போல் இதற்கும் கிடைத்தமையால், அதனைக்கொண்டு ஒருவாறு இவ்வுரையைப்பூர்த்திசெய்தோம்- இதனைப் பெற்று எமதூக்கம் தளராதுமென்மேலும் ஏனையவுபநிடதங்களையுமிவ்வாறே உரையிட்டலங்கரிக்குமாறு, ஈசனருள் புரிவாரென வெதிர்பார்க்கிறேம். ஸ்ரீ சங்கரானந்த யோகிகள் நாராயணபட்டர் முதலியோர் சிலரிதற்குரைசெய்தாருமுளர். அன்றி விசுவேசுவரயோகிகள் துறவறத்தைப் புகழுமிடம்இதனையெடுத்துத் தமது தர்மசாஸ்திரங்களில் நிரூபித்திருக்கின்றார்கள், இவ்வுத்தமவுபநிடதத்திற்கு யாமிட்டசிற்றுரைநீடூழிவாழ்க.

சுபம்.

கிரந்தகர்த்தா.

अथ

# प्राणाग्निहोत्रोपनिषत्

पारायणदीपिका ।

ओमाप्यायन्त्विति शान्तिः ।

अथ प्राणाग्निः प्रजापतिः प्रजापतेर्देहे ... (Grantha script; continuous commentary text not reliably legible for character-level transcription)

[illegible]

சிவமயம்

# ஆருணிகோபநிடதப் பேருரை.

## அவதரணிகை

இனியெல்லாவுபநிடதங்களுக்கும் பொதுவாய் அமைந்த அர்த்தவாதமுகத்தால் அருணமாமுனிபுதல்வர் ஆருணிமஹாரிஷியும், பிரஜாபதியென்ற பிரம்மதேவனும் நடாத்திய சல்லாபத்தை துவாரமாகக்கொண்டு பிரம்மவித்தையினதிகாரத்தைப் பூர்ணமாகக் கொடுக்கக்கூடியசன்னியாசத்தின்முறையைசுருதிநிரூபிக்கின்றது.

𑌆𑌰𑍁𑌣𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌃
𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑍇𑌰𑍍𑌲𑍋𑌕𑌂𑌜𑌗𑌾𑌮|
𑌤𑌂𑌗𑌤𑍍𑌵𑍋𑌵𑌾𑌚
𑌭𑌗𑌵𑌨𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑍋 𑌵𑌿𑌸𑍃𑌜𑌾𑌨𑍀𑌤𑌿 ||

(இ—ள்.) பிராஜாபத்திய விரதத்தையுடைய ஆருணி மஹாரிஷியானவர் பிரஜாபதியின் லோகத்தை யடைந்தார். அவரை யடைந்து ஓபகவானே எப்படிகர்மங்களையெல்லாம் பூர்ணமாய் விடுவேனென்றுகேட்டார். (எ—று)

(வி—ரை.) ஆருணி, இஃது சாமசாகையின் ஓர் உபநிடதமாதலால் சுவேதகேதுவே அருணமஹாரிஷியின் புத்திரனென இங்கு குறிக்கப்பட்டார். பிராஜாபத்தியவிரதமுடையவர் = பிராஜாபத்தியமென்னும் பிரம்மசரியத்தையுடையவர். இல்லறத்தவர்க்கு இவ்வகைப் பிரமசரியமே விதிக்கப்பட்டமையால். பிரஜாபதியின் லோகத்தை யடைந்தார் = கன்மப்பயனாகிய வுலகத்தைப் பெற்றனர். கேட்டார். வினவுதற்குரிய முறைப்படிவினவினர். கர்மங்களை யெல்லாம் பூர்ணமாய் விடுவேன் = கர்மத்தியாக மென்ற சன்னியாசத்தை யெவ்வணம் பெறுவேன். எ—று

## அவதாரணிகை

உபதேசமுறையைக்குறிக்கின்றார்.

𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 |
𑌤𑌵 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍 𑌭𑍍𑌰𑌾𑌤𑍄𑌨𑍍 𑌪𑌶𑍍𑌵𑌾𑌦𑍀𑌨𑍍 |
𑌶𑌿𑌖𑌾𑌂 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌂 𑌯𑌾𑌗𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌂 𑌚 ||
𑌭𑍂𑌰𑍍𑌲𑍋𑌕𑌂 𑌭𑍁𑌵𑌰𑍍𑌲𑍋𑌕𑌂 𑌸𑍁𑌵𑌰𑍍𑌲𑍋𑌕𑌂 𑌮𑌹𑌰𑍍𑌲𑍋𑌕𑌂
𑌜𑌨𑍋𑌲𑍋𑌕𑌂 𑌤𑌪𑍋𑌲𑍋𑌕𑌂 𑌸𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌂 𑌚 |
𑌅𑌤𑌲𑌂 𑌵𑌿𑌤𑌲𑌂 𑌸𑍁𑌤𑌲𑌂 𑌪𑌾𑌤𑌾𑌲𑌂 𑌰𑌸𑌾𑌤𑌲𑌂 𑌤𑌲𑌾𑌤𑌲𑌂
𑌮𑌹𑌾𑌤𑌲𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌂 𑌚 𑌵𑌿𑌸𑍃𑌜𑍇𑌤𑍍 || 𑌇𑌤𑌿 ||

(இ—ள்) அந்தப் பிரஜாபதிசொன்னதாவது; உனது புத்திரர்கள் பிராதாக்கள் பசுமுதலியவர் சிகை, யஞ்ஞோபவீதம், யோகம், சூத்திரம், வேதங்கள். பூலோகம், புவலோகம், சுவலோகம், மஹலோகம், ஜனலோகம், தபோலோகம், சத்யலோகம், அதலம், விதலம், சுதலம், பாதாலம், ரஸாதலம், தலாதலம், மஹாதலம், பிரம்மாண்டம் இவைகளையும்விலக்கென்பது.

(வி—ரை) பிரஜாபதியென்பவர் பிரம்மா. பிரம்மதேவனுடன் தத்துவவிசாரம்செய்து அவரது ஆயுள் முடியுங்காலத்து முக்தியடைந்து ஞானபரிபாகம்முற்றுப்பெறாதமுனிவர்க்குஇயல்பேயாதலால், இங்குள்ளசிஷ்டர் அந்தமுறையிலே சேர்ந்தவரென்பதறிந்து உபதேசிக்கின்றார். உனது புத்திரர்கள் முதலியவற்றால் புத்திரர்களென்று காட்டியதால் முக்கடன்களையும் ஒழித்து பூர்ணவைராக்கியம் பெற்றவனே இதில்முக்யாதிகாரியென்றதாயிற்று. அவன்போஷணையையெதிர்பார்க்கும் உடன்பிறந்தோராதியோரையும்விடவேண்டுமாம். இதுபிரமசரியத்திலிருந்து சந்நியாசம் பெறுவோர்க்கு முரியதே. சிகையையும் யஞ்ஞோபவீதத்தையும் அவசியம் விடவேண்டியதெனக்காட்டுகின்றார் சிகையென்பதாதியால். யோகம் என்றதுவானப்பிரஸ்தர்களுக்கு அதுமிகச்சிறந்ததாதலாலு

ம், கிரஹஸ்தர்களுக்கும் தனதாசிரமகர்மத்துக்கு விரோதமின்றி சித்தமாயுள்ள சாதனங்களையுடையோர்க்கே தர்மமாக விதிக்கப்பட்டது. சமம்முதலிய சாதனசதுஷ்டயங்கள் பூர்த்தியடைந்தவருக்கே பிரம்மவிசாரத்திற்கென சந்நியாசம் சொல்லப்பட்டமையாலும், வித்துவானானவற்கு சம்பிரதாயத்தைப் பரிபாலனம் செய்வதின்றி வேறுபிரயோஜனமின்மையாலும், யோகமும் விடப்படவேண்டுமென்றது. சூத்திரம் = சாஸ்திரங்கள், வேதங்கள் முதலியன. வேதங்கள் = பிரம்மயஞ்ஞம் முதலியநியமங்கள் இதே உபனிடதத்தில் ஆரண்யகங்களையும் உபனிடதங்களையும் ஜபிக்கவேண்டுமெனவிதித்திருத்தலால் எந்த வேதத்தையும் ஜபித்தல் கூடாதெனப்பொருள் கொடல் கூடாது. எவ்விதமான கர்மங்களுக்கும் பயன்களாகவமைவதுபூலோகம் முதலிய பதினாலுலோகங்களும் அதனுட்போகங்களுமேயாதலால் அவற்றைவிடுகவென விதித்தன் முகத்தால் கன்மங்களையொழிக்கவேண்டுமெனக் குறிக்கின்றார் பூலோகமென்பது புண்ணியபாபங்களின் செயற்கையின் பயனும். புவலோகமுதலியமற்றவை புண்ணியங்களின்பயன், அதலம் முதலியன பாபப்பயன். மஹாதலமென்பது பாதளத்துக்கும் குறியே பிரம்மாண்டமென்பது எல்லாவற்றையுங்குறித்தது கன்மத்தின் பயனாயமைவதெல்லாம் பந்தரூபமேயாதலால் அதனைவிட்டொழித்தலே நியாயமாமென்பது வேதத்தின் கருத்து.

## அவதரணிகை

இங்ஙனமெல்லாவற்றையும் விட்டொழிக்கப் புகுந்தவன் துறவறத்திற்குரியகுறிகளையும் விட்டுவிடாவண்ணம் அவற்றை எஞ்சவைக்கவிதிக்கின்றார்-

> தண்டமாச்சாதனம் கௌபீனம் ச பரிக்ரஹேத்
>
> சேஷம் விஸ்ருஜேச்சேஷம் விஸ்ருஜேதிதி ஸ்ருதி (௭-து)

(இ-ள்) தெண்டத்தையும், வஸ்திரத்தையும், கௌபீனத்தையும் கொள்ளவேண்டும். மற்றதை விடவேண்டும் மற்றதைவிடவேண்டும் கிருஹஸ்தனுயுள்ளவன்.

(வி—ரை) ஒருமை, விதேயமானதண்டத்தின் கண் இருத்தலால் ஓரேதண்டத்தைக் கொள்ளவேண்டுமென்றி இரண்டு மூன்று தண்டங்களை சன்னியாசிகள் ஏற்றல் வேதசம்மதமல்ல. வஸ்திரமென்பது காஷாயமாம். இவற்றை யேற்றுக் கொள்ள வேண்டுமென்றமையால் க்ரமப்படி சன்னியாசத்தைப் பெறுங் காலத்தில் எல்லாவற்றையும் விட்டு திகம்பரராய்ப்புறப்படுங் காலத்து அங்குள்ள இல்லறத்தவர்கள் கொடுத்ததண்டகாஷாயகௌபீனங்களை யேற்றுக்கொள்ளவேண்டுமென்பதுபொருளாயமைந்தது. இன்னும் கிருகஸ்தர் கொடுப்பனவற்றையேற்றுக்கொள்ளுதல் சன்னியாசிதர்மமானுல்மற்றைய பலவற்றையுமேற்கநேருமாதலால் அவைகள்கூடாவென நிஷேதிக்கின்றார்மற்றதைவிடவேண்டுமென என்பதால். மேற்கண்டவிதியெல்லாம் இல்லறத்தினின்று துறவறம் பெறுவோர்க்கே. அவர்களுக்கேபுத்திரர் முதலியோர்உண்டாதலால்புத்திரரைக்குறித்தது பெண்களையும் மனைவிகளையும் குறித்ததேயாம். இவைகளை விடவேண்டுமென்று சொன்னது மற்றய சன்னியாசவிதிகளுக்கும் குறிப்பேயாம். இதன் விசேஷங்கள் வேறுபிடத்திற்காணப்பட்டது. இவ்விடம் அவற்றை முற்றுங்குறிக்காமையால் குறையென்ற குற்றம் நேருமோவெனின்; அற்றன்று. ற்றவுந்திர்ந்தோர்க்கும் ஆபத்துக்காலங்களிலும் இவ்விதியே உபயோகமாதலால் அவ்வித உத்தமாதிகாரிகட்கே இது விதிக்கப்பட்டதெனக்கொள்ளப்படுதலாலென்க.

## அவதரணிகை

இங்ஙனமிருக்க பிரம்மசரியம் முதலியவற்றிலிருந்து துறவறம்பெறுதல் நியாயமன்றோவென சங்கைதோன்ற அதனை யொழித்து அவ்வாச்சிரமிகள் துறவறம் கொள்ளுமுறையைக் குறிக்கின்றார்.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ३ ॥

(இ—ள்.) பிரம்மசாரியும் வானப்பிரஸ்தனும் லௌகிகாக்னிகளை உதராக்னியால் சேர்த்துவிடவேண்டும் காயத்திரியையும் தன் வாக்காகிற அக்கினியில் ஆரோபணம் செய்யவேண்டும். யஞ்ஞோபவீதத்தை நிலத்திலாவது நீரிலாவதுவிடவேண்டும். எ—று.

(வி—ரை) இங்கு பிரம்மசாரிகளைப்போல் வானப்பிரஸ்தர்களுக்கும் லௌகிகாக்னி ஒன்றுண்டெனக் குறிக்கப்பட்டமையால்வீட்டில் மனைவிகளை விட்டுக் கானகஞ்சென்றோர்க்கும் மனைவி இறந்தோர்க்கும் வானப்பிரஸ்தராயின் நிச்சயமாய்லௌகிகமான வைதானிகாக்னி வுண்டென்றேற்படுகிறது. வாக்கென்ற அக்கினியில் = அக்கினி வாக்குருபனாய் முகத்துட் சென்றான் என்றுசில வேதபாகங்கள் சொல்லுவதால் வாக்குருபமான காயத்ரியை வாக்கினிடத்தே சேர்ப்பது நியாயமேயாம். ஜலத்தில்விடவேண்டுமென்று ஜாபாலோபநிடதம் கூறியது நீர்கிடைக்காதவிடம் சுத்தமான பாம்புப்புற்று முதலிய பூமிகளில் அதைத்தள்ளுவதே சாஸ்திர சம்மதமாம்.

## அவதாரணிகை

இனிக்குடீசகன், ஹம்சாசிரமத்தையடையும் முறையைக்குறிக்கின்றார்.

கூடீசகொஸ்ரூ ஹூவாரீ
க்ஷடீஜாஸ்ஞ்விஸ்ரூஜெஜஷ|
வாத்ரஂவிஸ்ரூஜெஷவவித்ரஂவிஸ்ரூஜெஜ்
ஷண்டாஞூலொகாநமீநுவிஸ்ரூஜெஷ||
இதிஹொவாசு|| என்று

(இ—ள்.) குடீசகனாகிய பிரம்மசாரி குடும்பத்தைவிடவேண்டும். பாத்திரத்தைவிடவேண்டும், பவித்திரத்தைவிடவேண்டும், தண்டங்களையும் லோகங்களையும் அக்னிகளையும் விடவேண்டும். என்றேயவர்உபதேசித்தார்,

(வி—ரை:) பிரம்மசாரியென்றது ஸ்திரீசம்பந்தத்தையொழித்துத் தவமுறைகொண்டவரைக் குறிப்பது. அவர் ஒரு சமயம் பத்தினியுடன்கூட இருப்பினுமிருக்கலாம். அல்லது புத்திரர் முதலியோராவது குடும்பமென்றசொல்லுக்குப் பொருளாகலாம். அல்லது என்று குடும்பத்தைவிடுவான், அன்றே பிரம்மசாரியெனவும் சேர்க்கலாம். பாத்திரமென்றது முன்னரேற்கப்பட்டலோகமயமான பாத்திரம் முதலியவற்றைக் குறித்தது. அல்லது மரப்பாத்திரம் முதலியவையும் அதன்பொருளாகலாம். தண்டங்களெனப்பன்மையாற்குறித்தது அவனுக்கு மூன்றுதண்டங்களுண்டாகையாலென்க. மூன்றுதண்டங்களை விடுவதென்றால் அவற்றைவிட்டு ஒருதண்டத்தையேற்பதாம். லோகங்களையென்பது முன்போலவே. அக்கினிகளை = வர்ணாசிரமிகளுக்குள்ள வைதாக்கினிகளை; என்று என்பது உபதேசத்தினுபசம்ஹாரம். இந்த வாக்யம் வேதத்தின்வாக்யமாதலால் உபதேசத்தினிறுதியிலிதனைச் சேர்க்கவேண்டும்.

## அவதரணிகை

இதன்மேலனுஷ்டானமுறையைக் குறிக்கின்றார்.

𑌅𑌤 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌦𑌾𑌚𑌰𑍇𑌤𑍍
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌗𑌮𑌨𑌂 𑌵𑌿𑌸𑍃𑌜𑍇𑌤𑍍
𑌤𑍍𑌰𑌿𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌂 𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍
𑌸𑌨𑍍𑌧𑌿𑌂𑌸𑌮𑌾𑌧𑌾𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌾𑌚𑌰𑍇𑌤𑍍
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌵𑍇𑌦𑍇𑌷𑍍𑌵𑌾𑌰𑌣𑍍𑌯𑌕𑌮𑌾𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍
𑌉𑌪𑌨𑌿𑌷𑌦𑌮𑌾𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌦𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑌮𑌾𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ॥

(இ—ள்) இதன்மேல் எதனையும் மந்திரமில்லாமலேயனுஷ்டிக்கவேண்டும். ஊர்த்துவகமனத்தை விடவேண்டும். மூன்று சந்தியாகாலங்களிலும் ஸ்நானம் செய்யவேண்டும், ஸமாதிகாலத்திலான்மாவிடத்தே சந்தியையனுஷ்டிக்கவேண்டும். எல்லாவேதங்களிலும் ஆரண்யகத்தை யாவிர்த்தி செய்யவேண்டும். உபநிடதங்களைப் படிக்கவேண்டும். உபநிடதங்களைப்படிக்கவேண்டும். (எ—று)

(வி—ரை.) இதன்மேல்=பரமஹம்ஸாச்ரமத்தை யடைந்த பிறகு. மந்திரமில்லாது=மனோவியாபாரத்தை முன்னிடாமல்(ஸங்கற்பமில்லாமலென்பது) கருத்து. கிருகஸ்தர்களுக்கும் வானப்பிரஸ்தர்களுக்கும் ஒவ்வொரு கர்மங்களுக்கும் மந்திரமுண்டாதலால் இவருக்கு எக்கன்மங்களுக்கும் மந்திரமில்லையென்பதைக்குறித்ததாம். ஊர்த்துவகமனம் என்பது மேலுலகங்களைக் கொடுக்கும் புண்ணியம். யதிகளுக்கு மூன்று காலங்களிலும் ஸ்நானம் விதிக்கப்பட்டமையால் மூன்றுகாலமும் முழுகவேண்டுமென்றது. சமாதியென்றது, ப்ரத்யக்பிரம்மைக்ய நிட்டை ஆத்துமாவென்பதுதீர்த்தம். இங்ஙனம் யதிகளும் மந்திரமற்றவராயின், பிரணவம்முதலிய மந்திரங்களைத்தான் எங்ஙனமிவர்களப்பியசிக்கக் கூடுமெனின்ற்கூறுகின்றார் எல்லாவேதங்களிலுமென்று. ஆரணியகமென்பது, காடுகளிற்படிக்கத்தக்கவேதபாகம். அதனைமுற்றுமவர்படிக்கவேண்டிய அவசியமில்லையெனவும், அதனேகதேசமான உபநிடதத்தையே அவர் படிக்கவேண்டுமெனவும், குறிக்கின்றார்,உபநிஷத்துக்களையென்பதால். ஒவ்வொருவேதங்களின் ஆரண்யங்களிலே வேதாந்தங்கள் படிக்கப்படுமாதலாலென்க. இதனால் எல்லாவுபநிடதங்களும் யதிகளுக்கு ஐச்சிகம்பாலனமென்றேற்பட்டது. யதிகளுக்கு வேதாந்த விசாரமே நித்தியகர்மமாமெனக் குறித்தற்கே உபநிஷத்துக்களையென்று தொடங்கிய வாக்கியம் இருமுறை ஆவர்த்திக்கப்பட்டதென்க.

## அவதரணிகை

மேலும் அனுஷ்டானமுறையையே குறிக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] என்று

(இ—ள்-) நான் பிரம்மம் என்றசூத்திரமே பெரியசூத்திரமாம். சூசிப்பதால் சூத்திரமெனப்படும். பிரம்மமாகிய சூத்திரம் நானேயெனத்தெரிந்து கொண்டவன் முப்பிரிநூலைவிடவேண்டும். இங்ஙனமறிந்தவனே வித்துவானாம். எ—று.

(வி—ரை.) யதிகள் தரிக்கவேண்டிய பிரம்மசூத்திரமானது யான் பிரம்மமென்ற நித்யானுசந்தானமேயன்றி வேறில்லையென்பது முடிந்த கருத்து. "ஸூசநாத் ஸூத்ரமித்யாஹு: =சூசிப்பதாலது சூத்திரமெனப்படும்" என்று பிரம்மோபநிடதம் கூறியபடியே இவ்வுபநிடதமும் சூத்திரச் சொற்பொருளைக் குறித்தது. சூத்திரம்=எல்லாவற்றையும் பிரகாசிக்கச்செய்யும்பிரம்மம். முப்பிரிநூல்=பருத்தியாலல்லது தோலாலமைந்தது. மூன் மூன்றுச் சிரங்களிலும் அஃதுண்டாகையாலென்க. இங்ஙனமறிந்தவனே அறிஞன். அவ்வறிஞனே மேற்குறித்தவெளிநூலைவிடவேண்டும் என்றுபொருத்துக.

## அவதரணிகை

இனிசன்னியாசம் ஏற்கும் விதியை பிரஸ்தாவத்தாற்கூறுகின்றார்.

ஸந்ந்யஸ்தம் மயா
ஸந்ந்யஸ்தம் மயா
ஸந்ந்யஸ்தம் மயேதி த்ரிருக்த்வா
அபயம் ஸர்வபூதேப்யோ மத்த: ஸர்வம் ப்ரவர்ததே ||

(இ—ள்) 'ஸந்ந்யஸ்தம் மயா' என்று மூன்றுதரம் சொல்லி, 'அபயம் ஸர்வபூதேப்யோ மத்த: ஸர்வம் ப்ரவர்ததே' என்றும் சொல்லவேண்டும். , என்று-

(வி—ரை) வியாஹிருதிகளை முன்னிட்டு காயத்திரியை அநுஷ்டிச் செலுத்தி சமஸ்த பூதங்களுக்கும் அபயத்தைக் கொடுக்கும் விரதத்துடன் பெண்ணாசை பொருளாசை புகழ்வாசைகளையொழித்ததே பிரேஷோச்சாரணம் என்ற சன்னியாசம் ஏற்றற்குப் பிரமப்ரமாணம் எனப்தே இம்மந்திரத்திற்குறிக்கப்பட்டதாம்.

## அவதாரணிகை

இனி சர்வசங்கங்களையும் விட்டவர்க்கும் லோகானுக்கிர காரத்தமாய் தெண்டாதிகளுண்டெனக் குறிக்கின்றார்.

ஸகா மா கோபாய
ஓஜஸ்ஸகாயோஸீந்த்ரஸ்ய வஜ்ரோஸி
வார்த்ரக்ந: ஶர்ம மே பவ யத்பாபம் தந்நிவாரய
இத்யநேந மந்த்ரேண க்ருதம் வைணவம் தண்டம்
கௌபீநம் பரிக்ரஹேத்॥ எ—று

(இ—ள்) 'ஸகாமா' என்றமந்திரத்தால்மூங்கிற்றண்டையும் 'வார்த்ரக்ந' என்னும்மந்திரத்தால்கௌபீனத்தையுமேற்கவேண்டும்.

(வி—ரை.) காஷாயதண்ட கௌபீனங்களையுங்கூட,தானே தேடியேற்கலாகாதாகையால் இல்லறத்தவர் எவரேனும் அவற்றைக்கொடுத்தால் அதனையேற்கும்பொழுது மேற்கண்டமந்திரங்களைக் குறிக்கவேண்டுமென்பதே மேற்கண்டவசனத்தின் கருத்து.

## அவதாரணிகை

வேறுதர்மங்களையும் குறிக்கின்றார்.

ஔஷதவதஶநமாசரேத்
ஔஷதவதஶநம் ப்ராஶ்நீயாத்
யதாலாபமஶ்நீயாத்॥ என்று

(இ—ள்.) ஔஷதத்தைப்போல ஆஹாரத்தைச் சேர்க்கவேண்டும். ஔஷதத்தைப்போல் ஆஹாரத்தைப்புசிக்கவேண்டும் கிடைத்தவரையிலேபுசிக்கவேண்டும். எ—று.

(வி—ரை.) ஔஷதம்போலென்றால் எட்டுக் கவளங்களென்ற அளவுமீறாதிருத்தல் பொருளாம். ஔஷதம்போல்புசிக்கவேண்டுமென்றுசொல்லில்உருசிமுதலியவற்றைஔஷதத்திற்பாராது

தின்பதுபோலிதனையுமுட்கொள்ள வேண்டுமென்பது புலப்பட்டது. கிடைத்தவரையிலென்றால் எட்டுக்கவளங்களுக்குக் குறைந்து கிடைத்தாலும் முற்றும் கிடைக்காமற்போனாலும் அதிற் சிறிதும் துயரமுறாது நீர்முதலியவற்றையாவது உண்டுகளிக்க வேண்டும் என்பது பொருள்.

## அவதாரணிகை

இனி அவசியமாய் சன்னியாசிகளுக்கு வேண்டியதர்மங்களைச்சொல்லுகின்றார்.

ப்ரஹ்மசர்யமஹிம்ஸாஞ்சாபரிக்ரஹஞ்ச
ஸத்யஞ்ச யத்நேந
ஹே ரக்ஷதோ ஹே ரக்ஷதோ ஹே ரக்ஷத || என்று

(இ—ள்.) பிரம்மசரியத்தையும் அஹிம்சையையும் பிரதிக்கிரகமின்மையையும் சத்தியத்தையும் வெகு பிரயத்தினத்துடன் ரக்ஷிக்க வேண்டும், ரக்ஷிக்கவேண்டும், ரக்ஷிக்க வேண்டும். எ—று.

(வி—ரை) எவனிடத்தும் எதையும் எதிர்பாராது சத்தியத்தையே காப்பாற்றுதல் சன்னியாசிகளுக்குத்தம் தர்மமாதலால் அதுவே பிரம்மதேவன் செய்தருளிய ஆணையென விசேஷித்து நிரூபிக்கின்றார். மும்முறை ரட்சிக்கவேண்டுமென்பதால்,

## அவதாரணிகை

இனி பரமஹம்சருடைய விர்த்தியைநிரூபிக்கின்றார்

[illegible] பரமஹம்ஸபரிவ்ராஜகாநாம்
ஆஸநசயநாப்யாம் பூமௌ ப்ரஹ்மசாரிணாம்
ம்ருத்பாத்ரம் வாலாபுபாத்ரம் தாருபாத்ரம் வா
காமக்ரோதஹர்ஷரோஷலோபமோஹதம்பதர்பேச்சா
அஸூயாமமத்வாஹங்காராதீம்ஸ்தாநபி பரித்யஜேத் ||

(இ—ள்) இனிபரமஹம்ஸ பரிவ்ராஜகர்களான்பிரம்ம சாரிகளுக்குஆஸனமும்சயனமும் தரையிற்றான் செய்யவே ண்டும். மண்பாத்திரம், சொரக்குடுக்கை, மரப்பாத்திரம் இவை யுபயோகிக்கலாம் காமம், குரோதம், லோபம், மோஹம், ம தம், மாச்சரியம், தம்பம், கொழுப்பு, இச்சை, அசூயை, ம மதை, அகங்காரம், முதலியவைகளையும் விடவேண்டும்

(வி—ரை) பிரம்மசாரிகளென்றது, பிரம்மசாரிகள் போன் றவிரதமுடையவர்என்றகருத்தால். காமம் = பெண்கள்முதலியவற் றில் உள்ளவிருப்பம், லோபம் = பணம்முதலிய வற்றில்விருப்பம். இச் சையென்பது சுவையுள்ள பொருள்களின் கண்விருப்பம், மதம் = ஊண்விருத்தியாலுண்டாவது. தம்பம் = டம்பம் = மற்றவரை ஏமாற்றுவதற்காக ஏற்கும் ஆடம்பரம். கொழுப்பு என்பது = செ ருக்கு. மாச்சரியம் என்பது ஒருவரிடத்துப் பகை. அசூயை = மற்றவர் பெருமை, பொறுமை மமதையென்பதுவீடுமுதலியபொரு ள்களில். அகங்காரமென்பது ஆன்மாவல்லது சரீரம் முதலியவற் றிலமைந்த தானென்ற எண்ணிக்கை. இவைமுதலியவற்றை விட வேண்டுமென்றால் புண்ணிய பாவர்த்தியும வற்குக் டாதென்பது பொருளாம்,

## அவதரணிகை

மீண்டும் அதனையே குறிக்கின்றார்.

வர்ஷாஸு த்ருவஶீலோऽஷ்டௌ மாஸ்யேகாகீ
யதிஶ்சரேத் | த்வாவேவாசரேத் ||

[இ—ள்] வர்ஷாகாலங்களில் சஞ்சாரத்தை யொ ழித்து எட்டுமாதங்களில்ஏகாகியாய் யதி சஞ்சரிக்கவேண்டு ம். இரண்டுமாதங்களாவது சஞ்சரிக்காதிருக்கவேண்டும்.

(வி—ரை) வர்ஷாகாலங்களில் = வருஷருதுவிலும் சரத் திலும் சாதுர்மாஸியகாலமாதலாலெனக. எட்டுமாதங்களில்என்ப து மற்றயக்காலங்களில் என்பதுபொருள். ஏகாகியென்றால் மற் றவருடன் சேராது தனித்திருப்பவர். யதி = பிரம்மத்தையடையவே

ண்டிய முயற்சியுள்ளவன். இரண்டுமாதங்களாவது = வருஷரு துமாத்திரம். அப்படியானால் பத்துமாதம் சஞ்சாரகாலமென்றபடி.

## அவதரணிகை

இனிவித்வத்சன்னியாசத்தைக் குறிக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (என்று)

(இ—ள்) இங்ஙனமறிந்த ஓர் வித்துவான் உபனயனத்திற்குமேல் முன்றுலேயாவது அவைகளைவிட்டு விடலாம் பிதாவை, புத்திரனை அக்னிகளை யஞ்ஞோபவீதத்தை, கன்மத்தை, களத்திரத்தைவேறு எதுஇருக்குமோ அதையும் என்பது பொருள்.

(வி—ரை) உபனயனத்துக்குமேல் என்றதனால் சன்னியாசத்திலதிகாரம் அதற்கு முன்வருவதில்லை யென்றேற்பட்டது முன்றுலேயே விடுவதென்றால் அவைகளை யேற்றுக்கொள்வதற்கு முன்னே துலைக்கவேண்டும். அதாவது விவாகத்திற்கு முன்னரே துறவறம் பெறுவது உத்தமாதிகாரிகளுக்குரியதென்றேற்பட்டது மற்றதுவெளி,

## அவதரணிகை

அவருக்கு ஆஹாரத்தைக்குறிக்கின்றார்.

[illegible]
[illegible]

(இ—ள்) யதிகள் பிக்ஷைக்காக கிராமத்தையடைவார்கள் கைப்பாத்திரத்தையாவது வயிற்றுப்பாத்திரத்தை யாவது உபயோகிக்கவேண்டும்.

(வி—ரை.) கைப்பாத்திரமென்பது எவர்களேனும் கொடுப்பதை கையால் வாங்கி வாயிற்போட்டுக்கொள்வது வயிற்றுப்பாத்திரமென்பது வாயாற் பதார்த்தங்களைத் தற்செயலாய்கிடைத்தவரையருந்துவது ௭—து

## அவதாரணிகை

இனியுபசங்கரிக்கின்றார்;

ஓம் ஹி ஓம் ஹீதி ஹ்யேவைதது பனிஷதம் வி ந்யஸேத் ॥
வித்வான் ய ஏவம் வேத
பாலாஸம் பைல்வமௌதும்பர மஜினம் மௌஞ்ஜீம்
மௌஞ்ஜீம் யஜ்ஞோபவீதம்
யஜ்ஞோபவீதம் ச த்யக்த்வா சூரஸ்ஸோ ॥ ௭—து

(இ—ள்) ஓம்ஹி, ஓம்ஹியென்று உபநிஷத்தைநியாசம்செய்யவேண்டும். இங்ஙனமறிந்தவன் வித்வான். பில்வம், பொரசு, அத்திதண்டங்களைவிடவேண்டும். முஞ்சிமேகலையஞ்ஞோபவீதம்இவைகளையும் விட்டேச் சூரனாவான்.

(வி—ரை) ஓம்ஹியென்பது ஓர்பொருளை யேற்றதற்குறி. உபநிடதத்தின் இறுதியில் மங்களத்திற்காகவும் பிரணவத்தையுப்யோகித்தாரென்க. உபநிடதத்தை நியாசம் செய்வதென்றால் அர்த்தபூர்வகமாய் அனுசந்தானம் செய்வதென்பதே கருத்தாம். இங்ஙனமறிந்தவன் வித்துவான் என்றமையால் இவ்வுண்மையறியாதார்க்குச் சன்னியாசாதிகாரம் குறையுமாமென்பதுகருத்து. பலாசம், பில்வம், அத்தியென்று மூவகைத்தண்டுகளையுமெடுத்தமையால் முதல் மூவருணத்தவருக்கும் சன்னியாசமுண்டெனக்குறிக்கப்பட்டது. இங்ஙனம் விட்டவனைச் சூரனென்றமையால் வைராக்கியத்தின் பயன்இஃதேயென நிரூபிக்கப்பட்டது.

## அவதரணிகை

இனிசன்னியாசத்தின் பயனைக்குறிக்கின்றார்.

யவைவம்வேத
தத்விஷ்ணோ: பரமம்பதம்
ஸதாபச்யந்தி ஸூரய:
திவீவசக்ஷுராததம்
தத்விப்ராஸோவிபந்யவோ
ஜாக்ருவாம்ஸஸ்ஸமிந்ததே
விஷ்ணோர்யத்பரமம்பதம்
இத்யேவம்நிர்வாணாநுசாஸநம்|
வேதாநுசாஸநம்வேதாநுசாஸநம்|
இத்யுபநிஷத்||

(இ—ள்.) எவனிப்படியறிவான் அந்தவிஷ்ணுவினுடைய பரமபதத்தை பண்டிதர்கள் என்றும் பார்ப்பார்கள். ஆகாயத்தில் விரிந்தகண்ணைப்போல கோபத்தைஜயித்தவிப்பிரர்கள் விழித்தவர்களாய், எது விஷ்ணுவின் பரமபதமோ அதனைப் பிரகாசிக்கச் செய்வார்கள். என்றஇதுமோட்சமார்க்கம். வேதத்தினுஞ்ஞை, வேதத்தினுஞ்ஞை. என்பதுஉபநிஷத்தாம்.

(வி—ரை) இப்படி எவனறிவான், எல்லாவற்றையும் விட்டவனே தீரனென்றும் சூரனென்றும் எவனறிவான்; இவனைப்போன்ற வித்வான்களின் பெருமையைக் குறிப்பது மேன்மந்திரம்; விஷ்ணுவினுடைய = வியாபகனாகியநாராயணனுடைய அல்லது 'ஸர்வேதேவாஸ்ஸம்விசந்தி விஷ்ணு:' = எல்லாதேவர்களும் ஒடுங்குமிடமாதலால் விஷ்ணுஎன்று அதர்வசிகை விஷ்ணுவென்றபெயரைச் சிவபரமாக நிரூபித்தமையால், அண்டத்திற் சேர்மலோகமும் பிண்டத்தில் துவாதசாந்தமும் விஷ்ணுபதமெனவும்கொள்ளலாம். அறிவார்கள் = தானெனவறிந்திடுவோர்கள்

ஆகாயத்தில்= இதயசிதம்பரத்தில்; அல்லது அண்டத்திலுள்ள கைலாசாதியில். விரிந்தகண்= அதாவது ஞானக்கண்ணேயாம். விழித்தவர்= உலகங்களென்ற இருளில் மயங்காது ஆன்மதேஜோமயத்தால் எங்கும் சஞ்சரிப்பவர். விஷ்ணுவின் பரமபதமென்பது பரிபூர்ணசைதன்னியரூபமான மோட்சமாம். அதனைவிர்த்தி செய்வதென்றால் இடையறாது அனுசந்தானம் செய்வதேயாம். இதுவேமோட்சமார்க்கம். இச்சன்னியாசம்மோட்சத்தையே கொடுக்கும் வழியாம். வேதத்தினாஞ்ஞையென்றதால் இஃது சுத்தவைதிகமென்றேற்படுகிறது. இருமுறைகூறியது இறுதியைக் குறிப்பதாம். "ஸைஷாஸூடநிஷத் ஸைஷா உபநிஷத்= இஃது உத்திரவு இஃது உபதேசம்" என்று வேறு உபனிடதங்களிலும் காணப்படுதலாலென்க. இங்ஙனம் பரமஹம்சர்களையனுக்கிரகித்தற்காக ஆருணமகாரிஷியின் புத்திரரைத் தலைமையாய்க்கொண்டு அகில நாதன் பிரம்மதேவன் சன்னியாசதர்மத்தினேகதேசத்தை உபதேசித்தருளினனென்பது ஓர் சிறிதாம் சுபம்.

ஆருணிகோபனிடதப்பேருரை.

முற்றிற்று

## ஆருணிகோபநிடத தாத்பரியசங்கிரகம்

இவ்வாருணிகோபனிடதமென்பது கன்மங்களெல்லாவற்றையும் ஒழித்து பிரத்தியக் பிரும்மைக்கிய நிஷ்டாரூபமான சன்னியாசத்தை நிரூபிப்பதால் இது சுத்தாத்வைதவித்தையே என்பது வெளியே. ஆதலால் அதனைப்பற்றியவிரிவை இங்கதிகம் எழுதவேண்டுவதில்லை, ஆயினும் எமது முறைப்படி அத்துவைதிகள் எளிதில் இதன் கருத்தையறியவேண்டி அறுவகைக்குறியிடுகளை எடுத்துரைப்பாம்- ஃஹம் ஃஹ ஸ ஃ ... என்பது உபக்கிரமம். உபசங்காரமும் இதற்கு விரோதமில்லாது இதற்குரிய ஒழுக்கங்களையே நிரூபித்திருக்கின்றது.

(உ) இடையிடையே ஆத்துமநிஷ்டர்க்குரிய அகங்காரத்தியாகம் முதலியவற்றைக் குறித்தல் அப்பியாசமாம்.

(௩) வர்ஷாகாலங்களில் ஓரிடம் தங்குவதன்றிமற்றயக்காலங்களெல்லாம் தேசாந்தரசஞ்சாரம் செய்துகொண்டு சுவேச்சாவாசமாய் ஏற்பட்ட சஞ்சரிக்கக்கூடிய விசேஷசன்னியாச தர்மங்கள் இதனிடத்து எடுத்து நிரூபிக்கப்படுகின்றமையால் அபூர்வதையென்றஏது இதனிடத்தமைந்தது.

(௪) இதன்பயன் மோட்சமென்பது 'தத்விஷ்ணோ:' என்னு இறுதிமந்திரத்தால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது

(௫) ஆருணிக்கும் பிரமதேவனுக்கும் சம்வாதம் முதலியவை இதற்கு அர்த்தவாதமாம்.

(௬) உபபத்திகள். எக்காலமும் உபனிஷத்துக்களையாவிர்த்திசெய்வதும் அதன்பொருள்களை விசாரிப்பதும்பிரணவானுசந்தானதற்பரராய்நிற்பதும் என்பதாதியாம். ஆகஇவ்வுபனிடதம் வேதாந்த விசாரபூர்வம் ஆத்மநிட்டையடையவேண்டியதற்கு யோக்கியமானசன்னியாசத்தை நிரூபிப்பதாய் சுத்தாத்வைத சாஸ்திரத்திற்சிறந்ததாயிற்று. சுபம்.

அநுஶாஸநம் = உபதேசம்

அவிரோதம் = ஒன்றையொன்று மேற்காதிருத்தல்

அமந்த்ரவத் = மந்திரங்களில்லாது.

ஆஸ்வாதம் = சுவை.

அஶேஷத: = முற்றிலும்

அஸூயா = பொருமை

அஹங்காரம் = தானென்ற எண்ணிக்கை

அஹிம்ஸா = ஹிம்ஸையை விலக்குதல்

ஆரண்யகம் = காட்டில் படிக்கவேண்டிய வேதபாகம்

ஆருணி: = அருணமகரிஷியின் புதல்வர்

இச்சா = விருப்பம்

உதராக்நி: = ஜாடராக்கினி

உதரபாத்ரம் = வயிறாகியபாத்திரம்

உபநிஷத் = ப்ரம்மத்தைக்காட்டும் ஞானகாண்டம்

ஊர்த்வகதம் = உத்தமகதி

ஏகாகீ = தனியாயுள்ளவன்

ஓஜ: = பராக்கிரமம்

ஓம் இதி = சன்னியாசிகள் உச்சரிக்கும் ஓர் சொற்றொடர்

ஔதும்பரம் = அத்தி

ஔஷதவத் = மருந்தைப்போல்

களத்ரம் = பெண்டீர்

காம: = காதல்

ஜாக்ரவாம்ஸ: = விழித்தவர்

த்ரிவ்ருத் = முப்பிரியுள்ளது

டம்ப: = டம்பம்

தண்ட: = கொம்பு

தாரு = மரம்

தஹரம் = ஆகாசம்

த்ருவஶீல: = ஒரேயிடத்துள்ளவன்

நிர்வாணம் = மோக்ஷம்

பதம் = ஸ்தானம்

பரம் = மாயையைக்கடந்தது

பாலாஶ: = பொரசு

பாணிபாத்ரம் = கையாகியபாத்திரம்

ப்ராஶ்நீயாத் = அருந்துவான்

ப்ராஜாபத்ய: ப்ராஜாபத்யப்ரம்மசரியவிரதமுடையவன்

பைல்வ: = வில்வம்

ப்ரஹ்மசர்யம் = பெண்ணைக்கனவிலும் கருதாதிருத்தல்

மோஹ: = மயக்கம்

மமத்வம் = தனதென்றெண்ணிக்கை

மஹர்லோக: = சுவர்லோகத்துக்கு மேலானலோகம்

மாத்ஸர்யம் = பகை

ம்ருத் = மண்

மௌநம் = தனியனாருதல்

மோக்ஷீ = மிஞ்சிப்புக்லைநான்

யோக: = அஷ்டாங்கயோகம்

லௌகிகாக்நய: = வானப்பிரஸ்தாதிகளுக்குரிய அக்னிகள்

வீதமந்யவ: = கோபமற்றவர்கள்

விப்ராஸ: = அந்தணர்கள்

விஷ்ணு: = வியாபகன்நாராயணன்

வார்த்ரக்ந: = இந்திரனைச்சேர்ந்தது

வைணவ: = மூங்கில்

ஶ்ரத்த: = உறுதியுள்ளவன்

ஸந்த்யா: = சந்தியாகாலத்திற் செய்யவேண்டியவழிபாடு

ஸூத்ரம் = சூத்திரம், குறிப்பு

ஸம்விதய: = உண்மையறிந்தவர்கள்

[illegible]

ஸோபநயநாத் = ஸஹ உபநயநாத் ஸோபவீதோப-
சஸ் பாதுகாமேதி ஸோபவீதாயம் விதாய பாது-
காதாரணம் ஹாஸ்யம் ॥
பாணிபாத்ரம் = பாணிரேவ பாத்ரம் - உபரிதலஸ்ய -
ஸ்வீகார்யஸ்,
உதரபாத்ரம் = ததா
ஓம் ஹி = ஸம்புஷ்டிகாயம் நிபாதம்,
பாலாஶம் = பலாஶவ்ருக்ஷவிகார:
பைல்வம் = பில்வவ்ருக்ஷவிகார:
ஔதும்பரம் = உதும்பரவ்ருக்ஷவிகார:
அஜிநம் = ஸகலபுஷ்பவ்ருக்ஷாதீநிதாந்யக்
பவித்ரம் = பவித்ரயஜ்ஞஸூத்ரம்
தண்டம் = தண்டீரேகவ்ருக்ஷஜாதிதாந்யக்
த்ருணம் = த்ருணாதிவ்யாபாராதோதயேத் ஸம்யக்காரணீவக்
விப்ராஸ: = விப்ரா: - ஸ்ருஜ்யமாநா: - ஸத்யவந்த:
விதந்த்யம் = விதந்த்யம் - ஸ்வஸ்தஸ்யஸ்த்யாத்
ஜாதரூபம் = ஜாதரூபதேஹ: - ஸம்ஸாரதோஷ:
நிர்வாணாநுஶாஸநம் = நிர்வாணம் அநுஶாஸிஷ்யதே
தேந தந் - ஶாஸ்த்ரநுஶாஸநவதேவ பவதி:
வேதாநுஶாஸநம் = நிர்வாணாநுஶாஸநவத்.

இலக்கணக்கொத்து முற்றிற்று.

---